நீர் வளங்கள் சபை - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர் வளங்கள் சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானது என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்கள் நியாயமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை

வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	சபையினால் 2016-2018 காலப் பகுதியினுள் ரூபா 295,178,532 தொகையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த 4 சொத்து தொகுதிகளுக்குரிய பயன்படு ஆயுட்காலம் நிறைவடைந்தமையினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகப் பெறுமதி பூஜ்ஜியமாக காணப்பட்ட போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்ட போதிலும் அச் சொத்துக்கள் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 92(ஆ) பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டினுள் புத்தளம், மொனராகலை, அநுராதபுரம் மாகாண அலுவலகங்களில் பயன்படு ஆயுட்காலம் நிறைவடைந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. யாழ்பாணம், ரத்மலான மற்றும் பிரதான அலுவலகங்களின் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்காக சபை முயன்ற போதிலும் பதவியனியினர் பற்றாக்குறை மற்றும் வெளி தரப்பினரை ஈடுபடுத்துவதில் காணப்பட்ட சிரமம் காரணமாக அந்தப் பணியை மேற்கொள்ள முடியவில்லை.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் பயன்படு ஆயுட்காலம் மதிப்பிடல் மற்றும் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் உரிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

		எவ்வாறெனினும் எதிர்காலத்தில் வெளி தரப்பினரை ஈடுப்படுத்திக் கொண்டு படிப்படியாக இந்த மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(ஆ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது அச் சொத்துக்கள் சேர்ந்த சொத்துக்கள் வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்கு சொாந்தமான இரசாயண உபகரணங்கள், கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் ஆகிய 3 சொத்துக்கள் வகுப்பிற்குரிய 1,005 உறுப்படிகள் காணப்படுகையில் அதில் 151 உறுப்படிகள் மட்டும் 2023 ஒக்தோபர் 30 ஆம் திகதி ரூபா 80,734,510 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	2023 ஆம் ஆண்டினுள் புத்தளம், மொனராகலை, அநுராதபுரம் மாகாண அலுவலகங்களில் பயன்படு ஆயுட்காலம் நிறைவடைந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. யாழ்பாணம், ரத்மலான மற்றும் பிரதான அலுவலகங்களின் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்வதற்காக சபை முயன்ற போதிலும் பதவியணியினர் பற்றாக்குறை மற்றும் வெளி தரப்பினரை ஈடுபடுத்துவதில் காணப்பட்ட சிரமம் காரணமாக அந்தப் பணியை மேற்கொள்ள முடியவில்லை. எவ்வாறெனினும் எதிர்காலத்தில் வெளி தரப்பினரை ஈடுப்படுத்திக் கொண்டு படிப்படியாக இந்த மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 69 பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்ட திகதி தொடக்கம் தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையயினால் 2024 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 21 சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி கருத்திற் கொள்ளப்படாது முழு ஆண்டிற்காகவும் தேய்வு செய்யப்பட்டமையினால் ரூபா 272,322 தொகை அதிகமாக தேய்வு செய்யப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்டது, சொத்துதொன்று கையகப்படுத்தப்பட்ட ஆண்டின் அவ் ஆண்டிற்குரிய முழுமையான தேய்வு கணக்கு வைக்கப்படும் அடிப்படையாகும். எதிர்காலத்தில் இ.பொ.க.நி 7 பிரகாரம் சபையின் சொத்துக்களுக்காக பொருத்தமான தேய்வு கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிறுவனத்தின் தேய்வு கொள்கை தயாரிக்கப்படல் வேண்டும் மற்றும் அதன் பிரகாரம் கணக்கு வைக்கப்படல் வேண்டும்.

(ஈ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான உதிரிப் பாகங்கள் மற்றும் ஆயத்த உபகரணங்கள் ஒரு காலப்பகுதிக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்துவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கும் போது மற்றும் மேலதிக உதிரிப் பாகங்கள் மற்றும் சேவை உபகரணங்கள் பயன்படுத்த முடிவது ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் உறுபடிகள் தொடர்பாக மட்டுமெனில் அவை ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், சபையினால் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் ஆயுட்காலத்தினை கொண்ட மற்றும் விசேட இயந்திர உபகரணங்களுக்காக பயன்படுத்தக் கூடிய மதிப்பீட்டு பெறுமதி/ கிரயம் ரூபா 1,147,913,000 தொகையான, செயற்திட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட மேலதிக உதிரிப் பாகங்கள் ஆதனங்கள் பொறிகள் உபகரணங்களாக இனங்காணப்படாது இறுதி இருப்பின் கீழ் சேர்க்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் நீர் வளங்கள் சபையிலுள்ள விசேட இயந்திர உபகரணங்களுக்காக பயன்படுத்தக் கூடிய மேலதிக உதிரிப் பாகங்கள் இ.பொ.க.நி 7 இன் 15 பிரகாரம் இருப்பிலிருந்து அகற்றப்பட்டு தொடர்புடைய சொத்துக்களில் சேர்ப்பதற்கு நவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் சரியான இனங்காணப்படுவதற்கு மற்றும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட இறுதி இருப்பினுள் ரூபா 126,484,062 தொகையான காலாவதியாகிய இருப்பும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 110,565,524 தொகையான இருப்பு காலாவதியாகி இருந்தமையின் காரணத்தினால் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது பௌதீக ரீதியாக காணப்படாமை அவதானிக்கப்பட்டது.	2025 ஆம் ஆண்டினுள் இந்த இருப்பு களஞ்சிய புத்தகங்களுக்கு உள்ளடக்கப்பட்டு வருடாந்த இருப்பு ஒப்பாய்விற்கு சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் முகவர் நிறுவனத்திற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ள காலாவதியாகிய பொருட்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் முறையாக புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் மற்றும் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட இருப்பிற்கு மேலதிகமாக இந்த காலாவதியாகிய இருப்பில் உள்ள ஏனைய மசகு எண்ணெய் உறுப்படி தொடர்பாக குழுவொன்று நியமிக்கப்பட்டு அக் குழுவின் தீர்மானம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	இருப்பு பெறுமதி சரியான இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபைச் சட்டத்தின் பிரிவு 16 இற்கு இணங்க அமைச்சரினால் 2017 மார்ச் 16 திகதிய 2010/23 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்ட கட்டளைகள்			
(i)	கட்டளை 02	குழாய் கிணறு நிர்மாணிப்பதில் மீளாய்வாண்டு இறுதியளவில் 41 நிறுவனங்கள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது. பதிவு செய்யப்படாத/ பதிவு புதுப்பிக்கப்படாத நிறுவனங்கள் குழாய் கிணறு நிர்மாணிக்காமை உறுதி செய்வதற்கு மற்றும் சபையில் பதிவு செய்யப்பட்டிராத நிறுவனங்கள் இனங்காணப்படுவதற்கு செயன்முறையொன்று சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சபையில் இது வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள துளையிடும் நிறுவனங்களுக்கு 2024 ஆம் ஆண்டிற்காக தமது துளையிடும் இயந்திரங்களின் பதிவினை புதிதாக்குமாறு 2023 திசெம்பர் 14 ஆம் திகதி எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2024 பெப்ரவரி மாதம் இறுதி வரையில் பதிவு செய்யப்படாத துளையிடும் நிறுவனங்களுக்கு மீண்டும் அது தொடர்பாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னரும் பதிவு செய்யப்படாத துளையிடும் நிறுவவனங்கள் தொடர்பில் குறித்த சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்காக போதமான ஏற்பாடுகள்	சட்டத்தின் பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாத துளையிடும் நிறுவனங்கள் பதிவு செய்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிப்பதற்கு மற்றும் அவ்வாறு இல்லாவிடின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

	தற்போது சட்டத்தில் இல்லாமையினால் சட்டத்தினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக குழாய் கிணறு நிர்மாணிக்கும் போது நீர் வளங்கள் சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள துளையிடும் இயந்திரத்தின் ஊடாக குறித்த துளையிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அனைத்து மாகாணங்களினதும் பிரதான செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் உட்பட அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சுற்றறிக்கை ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	
பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களினால் புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து ஆழமான அல்லது ஆழமற்ற குழாய் கிணறுகளின் தரவுகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையொன்று 03 மாதங்களுக்கு ஒரு தடவை சபைக்கு பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் மேற்படி பதிவு செய்யப்பட்ட 41 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் மட்டும் 2024 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 15 குழாய் கிணறுகளின் தொழிநுட்ப விபரங்கள் மட்டும் நீர் வளங்கள் சபைக்கு சமர்பிக்கப்படடிருந்தது. எனினும் ஏனையய பதிவு செய்யப்பட்ட 40	குழாய் கிணறுகள் நிர்மாணிப்பிற்கு பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து குழாய் கிணறுகள் துளையிடும் நிறுவனங்களுக்காக அவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறுகளில் தொழிநுட்ப தகவல்கள் சபைக்கு அனுப்புமாறு கடிதங்கள் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் சபையின் அங்கீகாரத்துடன் நிர்மாணிக்கப்பட்ட 15 குழாய் கிணறுகளின் தொழிநுட்ப விபரங்கள் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.	சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து உரிய வகையில் உரிய அறிக்கைகள் பெற்றுக் கெர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

		நிறுவனங்களினாலும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய அறிக்கைகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ii)	கட்டளை 06	சட்டத்தின் 16 ஆம் பிரிவிற்கு அமைய கட்டளை 1 இன் பிரகாரம் விவசாய நடவடிக்கைகள், வர்த்தக விவசாய நடவடிக்கைகளுக்காக இயற்கை நீரூற்றுக்கள் அல்லது ஆழமான அல்லது அழமற்ற நிலத்தடி நீரை பயன்படுத்தும் போது சபையின் மேற்பார்வை மற்றும் சபையினால் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற நியமங்களுக்கு அமைவாக செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும். 2 மற்றும் 3 ஆம் கட்டளைகளில் உள்ளடக்கப்பட்ட குழாய் கிணறுகள் நிர்மாணிக்கும் அனைத்து நிறுவனங்கள், நீர் போத்தலில் அடைக்கும் தொழில் மற்றும் பானங்கள் தயாரிப்பில் ஈடுப்பட்டுள்ள நிறுவனங்கள் சபையின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். 4 ஆம் கட்டளை பிரகாரம் வர்த்தக விவசாயத்திற்கான நீர் மூலங்கள் தொடர்பான தர அறிக்கைகள் நீர் வங்கள் சபையிடமிருந்து பெறப்பட வேண்டியதுடன் 5 ஆம் கட்டளையின் பிரகாரம் இடத்தினை பரீட்சிக்கும் உரித்து சபையுடையதாகும். அந்த கட்டகைகளை மீறும் அரச அல்லது உள்ளுராட்சி நிறுவனங்கள் அல்லது அரசு சாரா நிறுவனங்கள் அல்லது தனிநபர்களுக்கு எதிராக 1999 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளங்கள் சபை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம்	சபையில் தற்போது சட்ட உத்தியோகத்தரொருவர் இல்லாமையினால் 2010/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிக்கையின் 06 ஆம் கட்டளையின் பிரகாரம் அவ் வர்த்தமானி பத்திரிக்கையிலேயே கட்டகைகள் பின்பற்றப்படாதவர்களுக் காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக, 2024 செப்தெம்பர் 06 ஆம் திகதி ஆலோசனை கோரி சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்திற்கு பதில் பெறப்படவில்லை. எவ்வாறெனினும் சபைக்கு சட்ட உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்க்கப்படுவதற்கும் சட்டத்திலுள்ள குறைப்பாடுகள் இனங்கண்டு சட்டம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சட்டத்தின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள கட்டளைகள் பின்பற்றப்படாமை தொடர்பாக சபை சட்ட ரீதியாக நடவடிக்கைகள் எடுக்கட வேண்டும்.

		சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடிகின்ற போதிலும் சபையினால் மீளாய்வாண்டினுள் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) சட்டத்தின் பிரிவுகள் 10 மற்றும் 11	நிதியத்திற்காக தொழில் வழங்குனர் பங்களிப்பு 12 சதவீதம் தொழிலாளர் பங்களிப்பு 8 சதவீதம் ஆக காணப்பட வேண்டியதுடன் அதற்கு கூடிய சதவீதமொன்றிற்கு இணங்க முடிந்த போதிலும் சபையினால் தொழில் வழங்குனர் பங்களிப்பு 12 சதவீதமாக இருக்கும் போது ஊழிய்களிடம் 10 சதவீதம் அறவீடு செய்யப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக ஆணையாளருக்கு அறிவுருத்தியிருக்கவில்லை.	ஓ மாதிரி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தொழிலாளர் ஊழியர் பங்களிப்பு 2:3 விகிதம் என தொழிலாளர் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஊழியர் சேமலாப நிதி சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக சபையினால் தொழிலாளர் திணைக்களத்திடமிருந்து தகவல் கோரிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பாக பதில் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையின் ஆலோசனை அடிப்படையில் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சட்டத்தின் பிரகாரம் பங்களிப்பு தொகை செலுத்தல் மற்றும் அதிலிருந்து விலகும் போது தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,175,221,000 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,383,454,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி வளைவுகளில் ரூபா 791,767,000 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 708,137,000 இனால் அதிகரித்தமை மற்றும் ஒப்பந்த சேவைகள் மற்றும் பராமரிப்பு செலவுகள் உள்ளடங்கலாக மொத்த செலவு ரூபா 79,101,000 இனால் குறைந்தமை இதற்கான பிரதான காரணங்களாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நீர் வளங்கள் சபை 1978 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வந்த கொழும்பு 07 ஹெக்டர் கொப்பேகடுவ வீதியிலுள்ள பிரதான அலுவலகம் அமைந்துள்ள காணி 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் ரூபா 12,772,000 வாடகை தொகை செலுத்தப்பட்டு குத்தகை அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்குமாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் சபைக்கு தெரிவித்திருந்த போதிலும் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படாமையினால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினால் 2019 ஆம் ஆண்டில் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. பின்னர் காணியின் உரித்து தொடர்பாக சமரசத்திற்கு வருமாறு சட்டமா அதிபரினால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளருக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போது சட்டமா அதிபரின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது 45 ஆண்டுகளாக பிரதான அலுவலகம் இயங்கி வற்த வளாகம் அப்போதைய பிரதமர் பயன்படுத்திய உத்தியோகப்பூர்வ இல்லம் விரிவுப்படுத்துவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலகம் 2021 யூலை 18 ஆம் திகதி தொடக்கம் 2022 யூலை 15 ஆம் திகதி வரை இராஜகிரிய பிரதேசத்தில் தனியார் வாடகை கட்டிடமான்றிலும், 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் சாவல கொஸ்வத்த பிரதேசத்தில் தனியார் கட்டிடடிமான்றிலும் நடத்தி செல்லப்பட்டிருந்தது. அதற்காக 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கட்டிடங்களின் வாடகைக்காக ரூபா 42,511,722 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.	மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடாக தயாரிக்கப்பட்ட கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் குறித்த காணி கையகப்படுத்துவதற்கும் அதற்கு பதிலாக கட்டளைச் சட்டத்தின் 6(1) பிரிவின் கீழ் டென்சில் கொப்பேகடுவ வீதியிலுள்ள ஒரு காணியை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு செயற்பட்டு வருகின்ற போது பிரதமர் அலுவலகத்தின் ஆலோசனை பிரகாரம் அக் காணியிலிருந்து வெளியேற நேரிட்டது. இதற்கிடையில் திம்பிரிகஸ்யாய பிரதே செயலாளரினால் 2019 மே 09 மே திகதி சபைக்கு வெளியேற்றும் உத்தரவு பிறபிக்கப்பட்டிருந்தமையினால் இது தொடர்பாக 2019 நவம்பர் 26 ஆம் திகதி திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரின் 18935/5/19 ஆம் இலக்க வழக்கின் பிரகாரம் வெளியேற்றம் தொடர்பாக முறையாடு செய்யப்பட்டுள்ளது.	காணியில் காணப்படுகின்ற சிக்கல்கள் விரைவாக தீர்க்கப்பட்ட பிரதான அலுவலகம் நிரந்த இடமொன்றில் தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள 40 பர்சஸ்களை கொண்ட காணியொன்று 2016 திசெம்பர் 06 திகதிய அமப/16/2500/724/099 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் ஊடாக 30 வருட காலப் பகுதிக்காக நீர் வழங்கல் சபைக்கு வழங்குவதற்கு	பத்தரமுல்ல டென்சில் கொப்பேகடுவ வீதியில் அமைந்துள்ள 40 பேர்ச்சஸ் காணியின் உடற்பற்று 2016 ஒக்தோபர் 10 ஆம் திகதி தொடக்கம் சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அக் காணியானது காணி கையகப்படுத்தும்	நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் முறையான குத்தகை ஒப்பந்தமொன்று கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

தீர்மானிக்கப்பட்டிருந்தது. புதிய தலைமை அலுவல கட்டிடம் நிர்மாணிப்பதற்காக உத்தேசித்திருந்த, அந்தக் காணிக்காக அரச பிரதான விலை மதிப்பீட்டாளரினால் வருடாந்தம் ரூபா 2,700,000 தொகைக்கான குத்தகை தொகையொன்று மதீப்பீடு செயய்யப்பட்டிருந்தது. அக் காணிக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் குத்தகை உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்படாமல் சபையினால் 2016 ஆண்டு தொடக்கம் 2024 திசெம்பர் 31 வரை குத்தகையாக ரூபா 27,972,592 ஆம் தொகை அந்த அதிகார சபைக்கு செலுத்தியிருந்தது. நிலக்கீழ் நீர் ஆய்வுத் தகவல்கள் வலையமைப்பொன்று நிறுவுவதற்கான முன்னோடிச் செயற்திட்டமொன்றின் கீழ் இந்தக் காணியில் தலைமை அலுவலகக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2018 ஆண்டு முதல் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், முறையான குத்தகை உடன்படிக்கையொன்று காணப்படாமையால் ஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும் இந்த காணி 2023 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் ரூபா 460,000 மாதாந்த வாடகைக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு துணை குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.	சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் அதிகாரமளிக்கும் சான்றிதழ் ஊடாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் அரச காணிகள் கட்டளை சட்டத்தின் 6 (1) பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சட்ட ரீதியாக அதன் கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரையில் தொடர்புடைய குத்தகை ஒப்பந்தம் பெற்றுக் கொடுப்பதற்கு தாமதமாகியுள்ளது.

3.2 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிலக்கீழ் நீர் கண்காணிப்பு வலையமைப்பொன்று (Ground Water Monitoring Network) ஒன்று நிறுவுதற்கான முன்னோடிச் செயற்திட்டத்திற்காக சிறுசீரக நோய் பரவலாக காணப்படும் அனுராதபுரம், பொலன்னறுவை, மொணராகல மற்றும் புத்தளம் என தெரிவு செய்யப்பட்ட 4 மாவட்டங்களில் செயற்படுத்துவதற்காக 2015 ஜுலை 29 திகதி அமப/15/1087/644/005 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் செயற்படுத்துவதற்காக நீர்பாசன	நீர் வளங்கள் சபையின் பிரதான அலுவலகம் அமைந்துள்ள ஹெக்டர் கெப்பேகடுவ வீதியின் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையகப்படுத்தப்பட்டமையினால் சபைக்கு நிரந்தர பிரதான அலுவலகமொன்று இழக்கப்பட்டமையினால் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட பத்தரமுல்லையில் அமைந்துள்ள காணியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022 யூலை மாதத்தின் போதும் குத்தகை ஒப்பந்தம் பெற்றுக் கொடுக்காமையின் காரணத்தினால் செயற்திட்டம் நிறைவடையும்	செயற்திட்டத்திற்குரிய அடிப்படை பிகள் உடன்பட்ட பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டும்.

அமைச்சின் செயலாளரினால் நெதர்லாந்தின் நிறுவனமொன்றுடன் 2017 ஒக்தோபர் 03 ஆம் திகதி ஒப்பந்தமொன்றில் உடன்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் பணிகள் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் கிரயமான யூரோ 20,629,921.18 தொகையான ரூபா 5,521,329,000 தொகையில் 85 சதவீதம் நெதர்லாந்து வங்கியொன்றிலிருந்து வருடாந்தம் 1.45 சதவீத சலுகை வட்டி வீதத்தின் அடிப்படையில் 10 ஆண்டுகளில் சமமான 20 தவணைகளில் மீள செலுத்தப்பட வேண்டியதுடன் 15 சதவீதம் ஹட்டன் நெஷனல் வங்கியிலிருந்து 3 ஆண்டு கால சலுகை காலத்தின் பின்னர் 2025 இரண்டாம் அரை ஆண்டிலிருந்து 15 ஆண்டுகளில் செலுத்துவதற்கு அரசினால் உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் அடிப்படை பணிகளான தரவு மையத்தின் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிராததுடன் சபைக்குரிய கள அலுவலகமொன்றின் ஒரு பகுதியில் தரவு மையம் நடத்திச் செல்கின்றமை அவதானிக்கப்பட்டது.

தருணத்திலும் (2022 திசெம்பர்) இந்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை. அதன் பிரகாரம் குறித்த பரிந்துரையின் அடிப்படையில் இரத்மலான கள அலுவலகத்திலுள்ள தரவு மையம் மாற்றியமைக்கப்பட்டது. இந்த நிகழ்நேர தரவுகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக நீர் வளங்கள் சபையின் இணையத்தளத்தில் (https://wrb.lk) உள்ள GWMNP தாவலின் கீழ் கல்வி அல்லது பிற தரப்பினரின் முதன்மைப் பயன்பாட்டிற்காக ஒரு நிகழ்நேர தரவு டேஷ்போர்ட் தயாரிக்கப்பட்டுள்ளது.

3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
நிலத்தடி நீர் கன்காணிப்பு வலையமைப்பு (Ground Water Monitoring Network) நிறுவுவதற்கான முன்னோடி செயற்திட்டத்தில் பெறப்பட்டிருந்த கிரயம் ரூபா 159,222,580 தொகையான பென்ஸ் வகையிலான 02 துளையிடும் உபகரணங்களின் பராமரிப்பு செலவுகள் அதிகரித்தமை மற்றும் 02 இயந்திரங்களின் அளவு காரணத்தினால் பயன்படுத்தப்படாது குறை	நிலத்தடி நீர் வளங்களை ஒழுங்குப்படுத்தல் மற்றும் விதிமுறைகளை செயல்படுத்தும் ஒரு நிறுவனம் என்ற வகையில் தற்போது நிலத்தடி நீர் வளங்களை ஒழுங்குப்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படுவதனால் கடந்த ஆண்டுகளில் வணிக ரீதியான துளையிடும் நடவடிக்கைகளில் குறைவு காணப்பட்டது. அவ்வாறே வணிக ரீதியான துளையிடும் நடவடிக்கைகள் தற்போது சபையிலுள்ள துளையிடும் இயந்திரங்கள் ஊடாக மேற்கொள்ள	நிறுவனத்தின் சொத்துக்கள் வினைத்திறனாக பயன்படுத்தப்படல் வேண்டும்.

பயன்பாட்டுடன் வைக்கப்பட்டிருந்தமை பௌதீக பரிசேதனையின் போது அவதானிக்கப்பட்டது.	முடிவதுடன் விசேட செயற்திட்டங்களின் போது இந்த புதிய துளையிடும் இயந்திரங்கள் பயன்படுத்துதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

3.4 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியனியினர் 414 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாரான பதவியணியினர் 217 ஆகும். அதன் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியின் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்கள் 197 ஆனவர்கள் அதாவது அங்கீகரிக்கப்பட்ட பதவியில் 48 சதவீதமான பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. மேற்படி சிரேஷ்ட நிலையினுள் உள்ளடக்கப்பட்ட 12 பதவிகளில் 10 வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அதனுள் முகாமையாளர் மற்றும் 03 பிரதி முகாமையாளர்கள் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டது. மூன்றாம் நிலையில் 27 பதவிகளில் 18 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் அதனுள் 06 உதவி பொறியியலாளர்கள் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. மேலும் முதன்மை நிலையின் 236 பதவிகளில் 105 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.	உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறல், சேவையை விட்டு விலகல், சம்பளமற்ற விடுமுறைகள் பெற்றுக் கொள்ளுதல் போன்ற வெவ்வேறு காரணங்களால் வெற்றிடங்கள் உருவாகியதுடன் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்வதற்கு அவ்வப்போது ஆட்சேர்ப்பு மீளாய்வு குழுவிற்கு கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இது வரையில் ஆட்சேர்ப்பிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.	வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை கருத்திற் கொள்ளும் போது வட மேல் மாகாணத்திற்கு 24 உம், புத்தளத்திற்கு 26 உம், மொனராகலைக்கு 40 உம் மற்றும் யாழ்பாணத்திற்கு 23 உம் இணைக்கப்பட்டிருந்த போதிலும் அவ் அலுவலகங்களுக்காக பதவியணியினர் வெவ்வேறாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.	சபையின் பணிகள் நிறைவேற்றும் போது உருவாகின்ற சேவை தேவைப்பாடு அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச அலுவலகங்களுக்கு ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசியமாக இணைக்கப்பட வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக குறிப்பாக இனங்காண்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும்	சரியான அளவுகோள்கள் அடிப்படையாகக் கொண்டு அத்தியாவசியமாக இணைக்கப்பட வேண்டிய பதவியணியினர் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதன் செயன் முன்னேற்றம் பரிசோதிக்கும் போது திறைச்சேரியின் நிதியேற்பாட்டின் கீழ் செயல்படுத்தப்படுகின்ற நிலத்தடி நீர் அய்வு மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் முன்மொழிவு திட்டத்தின் நீலத்தடி நீர் முகாமைத்துவம் மற்றும் மேம்பாடு ஆகிய நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் 68 சதவீதம் மற்றும் 22 சதவீதமாகவும் நீர்பாசன அமைச்சின் கீழ் வெளிநாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் IWWRMP செயற்திட்டத்தின் நிலத்தடி நீர் வளங்கள் முகாமைத்துவம் வலுப்படுத்தும் செயற்பாட்டின் பௌதீக மற்றும் நிதி செயன் முன்னேற்றம் முறையே 34 சதவீதம் மற்றும் 13 சதவீதமாக காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.	சமூக நீர் விநியோகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியமையினால் தொடர்புடைய நீர் மூலங்கள் நீர் கொள்ளளவு பரிசோதனைக்கு பயன்படுத்துவதற்கு முடியவில்லை. செயற்திட்டத்தின் பெறுகை செயன்முறை, செயற்திட்டம் முகாமைத்துவ பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றமையினால் அதன் ஊடாக பெற வேண்டிய இரசாயண பொருட்கள் பெறுகையின் தாமதம் காரணத்தினால் அதற்குரிய இரசாயண பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது மற்றும் ஏனைய பெறுகை செயன்முறைகளிலும் தாமதங்கள் ஏற்பட்டன.	திட்டமிட்ட செயற்பாடுகள் உரிய வ்ணம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.